# தொல்காப்பிய தொன்னூல் ஒப்பீட்டில் பெயர்ச்சொல்

**K.Monisha**
RegNo – 21113154022028, Research Scholar, Department Of Tamil, S.T.Hindu College, Nagercoil. Manonmaniam Sundaranar University, Tirunelveli.G.mail – monisha.ambi@gmail.com
ORCiD : https://orcid.org/0000-0002-6768-3876
**DR.R.Sorna Bamila**
Assistant Professor, Department Of Tamil, S.T.Hindu College, Nagercoil. Manonmaniam Sundaranar University, Tirunelveli.
G.mail - sornabamila1986@gmail.com,
ORCiD : https://orcid.org/0000-0002-3677-4644

**ஆய்வுச் சுருக்கம்**

பரம்பொருளான சிவபெருமானே முதல் சங்கத்தின் தலைவனாக வீற்றிருந்து செழுமையோடு வளர்த்த மொழி தமிழ் மொழியாகும். தமிழின் பெருமையை விளக்கும் பொருட்டு தொல்காப்பியரால் உருவாக்கப்பட்டதே தொல்காப்பியமாகும். நுட்பமாக ஆராய்ந்து தமிழின் இலக்கண கூறுகளை கூறுவதால் இது காப்பு நூலாகவும் கொள்ளப்படுகிறது. இதற்கு பிற்பாடு தோன்றிய இலக்கண நூல் வரிசையில் 18-ம் நூற்றாண்டை சேர்ந்த ஐந்திலக்கண தொன்னூல் விளக்கம் வேற்று நாட்டிலிருந்து வந்து தமிழ் மீது காதல் கொண்ட வீரமாமுனிவரால் இயற்றப்பட்டது.இது தொல்காப்பியத்திலிருந்து பல்வேறு மாற்றங்களை கொண்டுள்ளது.

சொற்கள் பெயர்,வினை என இரு வகைப்படும்.அதை சார்ந்த வருவது இடை, உரி என்பது தொல்காப்பியர் கருத்து.இதில் பெயர்ச்சொல், வினைச்சொல் முதன்மைச் சொற்கள் எனவும் இடைச்சொல்,உரிச்சொல் துணைமைச் சொற்கள் எனவும் தொல்லாசான் கூற தொன்னூலாரோ ஒரே நூற்பாவில் சொல் நான்கு கூறுபாடுகளாக பிரிக்கப்பட்டுள்ளது எனக் கூறிச் செல்கிறார். இதில் முதன்மையானது பெயர்ச்சொல். இது குறித்து தொல்காப்பியர் கூறுகையில் உயர்திணைக்குரிய பெயர்,அஃறிணைக்குரிய பெயர், விரவுப் பெயர் என மூவகையில் அமையும் என்கிறார்.வீரமாமுனியோ பெயர்ச் சொல்லானது வேற்றுமைப் பெற்று மூவிடம்,ஐம்பால், இருதிணை இவற்றைக் காட்டி காலம் காட்டாமல் மரபுப் பெயர்,காரணப்பெயர், ஆகுபெயர் இடுகுறிப்பெயர் என நான்கு வகையில் வரும் என்கிறார். உயர்திணைப் பெயர்,அஃறிணைப் பெயர் என நோக்கும் போது தொல்காப்பியர் நூற்பாவிலேயே விளக்கம் கூற, தொன்னூலாரோ நூற்பாவைக் கூறி அதன் விளக்கத்தில் சுட்டெழுத்து, வினாவெழுத்து புணரும் முறை, மொழியின் எவ்விடத்தில் அமையும் என விரிவான ஒரு தெளிவுரையை தருகிறார்.இவற்றையெல்லாம் இவ்வாய்வு கட்டுரை வழி அறியலாம்.

**திறவுச்சொற்கள்**

தொல்காப்பியம், தொன்னூல் விளக்கம் , பெயர்ச்சொல், உயர்திணை,அஃறிணை.

**முன்னுரை**

தமிழின் முதன்மையான இலக்கண நூல் என்று போற்றுதற்குரியது தொல்காப்பியமாகும்.கி.மு வைச் சேர்ந்த இந்நூலுக்கு முன்னரே பல்வேறு இலக்கியங்கள் தோன்றியிருக்க வேண்டும். இலக்கண நூல்களில் ஒன்றான கிறிஸ்தவ தமிழ் தொண்டரான வீரமாமுனிவரால் இயற்றப்பட்டது ஐந்திலக்கண தொன்னூல் விளக்கம் என்ற இலக்கண நூலாகும். பெரும்பாலும் இதற்கு முன்பு எழுந்த இலக்கண நூல்களை தழுவியே இந்நூல் எழுதப்பட்டது எனலாம். இவ்வாறு வெவ்வேறு முறையில் வெவ்வேறு காலகட்டங்களில் எழுந்த இந்த இரு இலக்கண நூல்களின் சொல்லமைப்பை,பெயர்ச்சொல் என்ற முறையில் அதன் கூறுபாடுகளை ஒப்பீட்டு முறையில் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**சொல்**

சொல் என்பது ஏதோ ஒன்றை சுருக்கமாய்க் குறிக்கும் அடிப்படை மொழிக்கூறு.எழுத்துக்கள் தனித்து நின்றும் ஒன்றிற்கும் மேற்பட்ட எழுத்துக்கள் தொடர்ந்து வந்தும் பொருள் தருவது சொல் எனப்படும். இதை தொல்காப்பியர்

**"எல்லா சொல்லும் பொருள் குறித்தனவே"** **(தொல். நூ-155)**

ISSN: 2320-4842
Vol-18 No. 04 October–December 2024

என்கிறார். தன்னையும் உணர்த்தி பெயர்,வினைகளை சார்ந்து அமைவதும் சொல் எனப்படும்.பெயர்,வினை,இடை,உரி எனச் சொற்கள் நான்கு வகைப்படும். அவை அனைத்தும் பொருள் குறித்தே வரும். இதனையே நன்னூலாரும் எழுத்துக்கள் தனித்தோ,தொடர்ந்தோ பொருள்தரின் பதமாகும் என்பார். ஓர் எழுத்தாக இருப்பினும் பொருள்தரின் அது சொல்தான்.பசு என்னும் பொருள் தரும்"அ"என்னும் சொல்லை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

**சொல்லின் வகைகள்**

சொல்லானது பெயர்ச்சொல், வினைச்சொல் என இரண்டு வகைப்படும்.இடைச்சொல்லும், உரிச்சொல்லும் பெயர்,வினையைச் சார்ந்து வரும் என்பது தொல்காப்பியரின் கருத்து.எனவே பெயர்,வினை முதன்மைச் சொற்கள் என்றும் இடை,உரி ஆகியன துணைமைச் சொற்கள் என்பதும் புலனாகின்றன.

**முதன்மைச் சொற்கள்**

**"சொல்எனப் படுபபெயரே வினை என்று**
**ஆயிரண்டு என்ப அறிந்திசி னோரே "** **(தொல்.நூ -158)**

சொற்கள் பெயர்ச்சொல், வினைச்சொல் என இரண்டு வகைப்படும்.அவை சொல் என்ற சிறப்பிற்குரியதாகும். இதில் பொருளானது தன் நிலையில் மாற்றமடைந்து தொழிலை பற்றாது, அப்பொருளைப் பற்றி மட்டும் வரும் சிறப்புடையதால் பெயர் முன் கூறப்பட்டது.(பெயரானது தொழிலை பற்றாது என்பதால் வினைத் தொழிலைக் கொண்டு அமையும் என்பது குறிப்பு)

**துணைமைச் சொற்கள்**

இடைச்சொல்லும்,உரிச்சொல்லும் பெயரையும்,வினையையும் சார்ந்து (இடமாகத்) தோன்றும்.பெயரையும், வினையையும் சார்ந்து வரும் இவ்விரண்டையும் பெயர், வினையோடு இணைத்துக் கூற சொல்லானது நான்காகும். சார்ந்து தோன்றுதலால் அதைச் சிறப்பிக்கவில்லை.மேலும் வழக்கில் இடைச்சொல் முன்னே கூறப்பட்டது.இதை பின்வரும் நூற்பா கூறுகிறது.

**"இடைச்சொல் கிளவியும் உரிச்சொல் கிளவியும்**
**அவற்றுவழி மருங்கில் தோன்றும் என்ப"** **(தொல்.நூ.159)**

இதை பிந்தைய இலக்கண நூலான தொன்னூல் விளக்கமானது

**"எச்சொல்லும் பெயர் வினை இடை உரிஎன நான்கு" (தொன்.நூ-42)**

என்ற நூற்பா வழி பெயர்,வினை, இடை,உரி என நான்கு கூறுபாடுகளாகக் கூறப்படுவது சொல்லாகும் என்கிறது.சொல்லின் பொருளை விளக்குவது பெயராகும். பொருளின் தொழிலை விளக்குவது வினையாகும். இவ்விரண்டையும் சார்ந்து ஒன்றி வருவது இடையேயாகும்.பெயரையும், வினையையும் தழுவிப் பற்பல குணங்களை விளக்குவது உரியே என அறியப்படுகிறது.இதையே முத்துவீரியமும்,

**"பெயர்வினை யிடையுரி யெனச்சொன் னான்கே" (முத்துவீ. நூ.3)**

என்ற ஒற்றை வரி மூலம் விளக்குகிறது. இதில் சொல்லானது பெயர்,வினை,இடை,உரி என நான்கு வகைப்படும்.அவை இரண்டு பிரிவில் அமையும்.பெயர் வினையைச் சார்ந்து அமைவதே இடை,உரி எனத் தொல்காப்பியர் கூற, தோன்னூலாரோ ஒரு நூற்பாவில் சொல் நான்கு கூறுபாடுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது எனக்கூறி அதன் விளக்கத்தில் சற்று விரிவாக தெளிவுபடுத்துகிறார்.

**பெயர்ச்சொல்**

ஒரு பொருளின் பெயரையோ, இடத்தின் பெயரையோ,காலத்தின் பெயரையோ குறிக்கும் சொல் பெயர் சொல்லாகும்.ஒரு பொருளுக்கு எனக் குறிப்பிட்டு வழங்குவதால் பெயர் என்பது காரணக்குறியாகும். பொதுவாக ஒரு பொருளைக் குறிக்கும் சொல்லைப் பெயர்ச்சொல் என்று கூறுவர்.

**பெயர்ச்சொல்லின் இலக்கணம்**

பொருள் வேறுபாடுகளைப் பற்றி சிறப்பாக கூறும் பெயர்,வினை, இடை,உரி என்ற சொல்லின் பொது இலக்கணங்களில் இது பெயர்ச்சொல்லை உணர்த்துவதாக அமைந்துள்ளது.சொல்

எனக் கூறப்பட்ட நான்கனுள் முதலாவதாக கூறப்படுவது பெயர்ச் சொல்லாகும். இச்சொல்லானது உயர்திணைக்கு உரியன,அஃறிணைக்கு உரியன, இரண்டு திணைக்கும் உரியன (விரவுத்திணை)என மூன்று வகையாக வெளிப்பட்டு தோன்றும் என்பதை தொல்லாசான்

**"பெயர்எனப் படுபவை தெரியும் காலை**
**உயர்திணைக்கு உரிமையும் அஃறிணைக்கு உரிமையும்**
**ஆயிரு திணைக்கும்ஓர் அன்ன உரிமையும்**
**அம்மூ உருபின தோன்ற லாரே" (தொல்.நூ-160)**

என்ற சூத்திரம் மூலம் பகர்கிறார்.

**(உ. ம்) கோப்பெருஞ்சோழன்----->** உயர்திணைப் பெயர்
**யானை ----->**அஃறிணைப் பெயர்
**தாய் (தாய் வந்தாள்,தாய் வந்தது)------>** விரவுப் பெயர்

இதையே தொன்னூல் விளக்கமானது சொல் என வகுக்கப்பட்ட நான்கு வகைச் சொற்களில் பெயர்ச்சொல்லை விளக்குவதாக அமையும். பெயர் என்பது வேற்றுமையுருபுகளை ஏற்றும், மூவிடம் (தன்மை,முன்னிலை,படர்க்கை), இருதிணை (உயர்திணை, அஃறிணை) ஐம்பால்(ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால்)என இவற்றை வெளிப்படையாகக் காட்டித் தொழிலின் காரணமாக வரும் பெயர்கள் மட்டுமே காலத்தை காட்டும், மற்ற பெயர்கள் அனைத்தும் காலத்தை காட்டாமல் வரும்.இது மட்டுமின்றி மரபு பெயர், காரணப்பெயர்,ஆகுபெயர், இடுகுறிப் பெயர் என பெயர்ச்சொல் நான்கு வகையில் அமையும். இவையே பொருட்பெயர்,வினையாலணையும் பெயர்,தொழிற்பெயர்,பண்புப் பெயர் என இந்நால் வகையுள் அடங்கும் என்கிறது. இதை

**"பெயரே வேற்றுமை பெற்று இடம் பால் திணை**
**காட்டித் தொழில் அல காலம் காட்டா**
**மரபு காரணம் ஆக்கம் குறி என்று**
**அவை நால் தகுதி ஆகும் என்ப" (தொன்.நூ-53)**

என்ற தொன்னூல் வரிகளும் குறிப்பிடுகிறது.

**(உ.ம்) பொன்னன் -** பொருட்பெயர்
**உண்டவன் -** வினையாலணையும் பெயர்
**நடத்தல் -** தொழிற்பெயர்
**சண்டை,கூத்து,வேட்டை -** முதனிலைத் தொழிற்பெயர்கள்
**கருமை -** பண்பு பெயர்

இதை நன்னூல்

**"இடுகுறி காரண மரபோடு ஆக்கம்**
**தொடர்ந்து தொழிஅல காலம் தோற்றா**
**வேற்றுமைக்கு இடனாய்த் திணைப்பால் இடத்தொன்று**
**ஏற்பவும் பொதுவும் ஆவனப் பெயரே" (நன்.நூ-275)**

என்ற நூற்பா மூலம் பகர்கிறது.மேலும் இலக்கண விளக்கம் (176ஆம் நூற்பாவும்) இதையே மொழிகிறது.நேமிநாதம் (29ஆம் நூற்பாவும்),முத்து வீரியம் (4ம் நூற்பாவும்) தொல்காப்பியத்தை ஒத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

பெயர்ச்சொல் குறித்து தொல்காப்பியர் கூறுகையில் உயர்திணை, அஃறிணை,விரவுத்திணைகளுக்குரியது என மூன்று நிலைகளில் கூறுகிறார்.ஆனால் தொன்னூலாரோ பொருட்பெயர், வினையாலணையும் பெயர்,தொழிற் பெயர்,பண்பு பெயர் என நால்வகை எனக் கூறி,இவற்றுள் அடங்குவதாக மரபுப் பெ)யர்,காரணப் பெயர், ஆகுபெயர், இடுகுறிப்பெயர் குறிப்பிட்டுள்ளார். இதில் பெயர்ச்சொல் என்பதில் தொல்காப்பியரும், தொன்னூலாரும் ஒன்றியும் அதன் வகைகளில் வேறுபட்டும் காணப்படுகின்றனர்.

**உயர்திணைப் பெயர்கள்**

பெயர் சொல்லின் வகைகளுள் ஒன்றான உயர்திணைப் பெயரானது சுட்டுப் பெயர்,தன்மைப் பெயர், வினாப் பெயர் என இவற்றின் அடிப்படையில் ஆறறிவுயிர்களான ஆண்பால்,பெண்பால்,பலர்பால்களைத் தன்னகத்தே கொண்டு அமையும்.

**சுட்டு,தன்மை, வினாப் பெயர்கள்**

ஒரு முறை பயன்படுத்திய பெயர்ச் சொல்லுக்கு மாற்றியாகப் பயன்படும் இன்னொரு சொல்லே சுட்டுப் பெயர் ஆகும்.பேசுபவர் தன்னை குறிப்பது தன்மை எனப்படும். வினாப் பொருளைக் குறிக்கும் எழுத்து வினாவெழுத்து எனப்படும். இவ்வெழுத்துக்கள் ஒரு சொல்லில் வினாவை உண்டாகுகின்றன.

உயர்திணை,அஃறிணை,விரவுத்திணைக்கு உரியவை என மூவகையாக மேற்கூறப்பட்டவை பெயர்ச் சொற்கள் ஆகும். அவற்றுள் அவன்,இவன், உவன், அவள், இவள், உவள், அவர்,இவர், உவர், யான்,யாம், நாம் என்னும் பன்னிரெண்டும் பெயர்களாக அமையும்.அவற்றொடு யாவன், யாவள்,யாவர் என்னும் மூன்றையும் கூட்ட அப்பெயர்கள் பதினைந்தாகும்.இவை அனைத்தும் முப்பாலினையும் தெளிவாக உணர்த்துகின்ற உயர்திணைப் பெயர்களாகும் என தொல்காப்பிய சொல்லதிகாரம் கூறுகிறது.

**(எ.கா)அவன்,இவன், உவன் ----->**மூவிட ஆண்பாற் சுட்டுப் பெயர்கள்

**அவள்,இவள்,உவள் ----->**மூவிட பெண்பாற் சுட்டுப் பெயர்கள்

**அவர்,இவர்,உவர் ----->**மூவிட பலர்பால் சுட்டுப் பெயர்கள்

**யான்,யாம்,நாம் ----->**தன்மை இடப் பெயர்கள்

**யாவன்,யாவள்,யாவர்----->**முப்பால் வினாப் பெயர்கள்.

**சான்று.**

இடைக்கால இலக்கிய நூலான கம்பராமாயணத்திலும் இத்தகைய சுட்டுப் பெயர்கள் காணப்படுகின்றன.

**உவன் காண் குமுதன்;குமுதாக்கனும் ஊங்கு அவன் காண்;**
**இவன் காண் கயவன்;கவயாக்கனும் ஈங்கு இவன் காண்;**
**(கம்ப. யுத்த காண்டம்.7016:1,2)**

**அஃறிணைப் பெயர்கள்**

அது, இது, உது என்னும் உகர ஈற்றுச் சுட்டுப் பெயர்கள்.அஃது, இஃது,உஃது என ஆய்தத்தை இடையில் பெற்ற உகர ஈற்றுச் சுட்டுப் பெயர்கள்.அவை,இவை,உவை என வரும் ஐகார ஈற்றுச் சுட்டுப் பெயர்கள். அவ்,இவ்,உவ் என்னும் வகர மெய்யீற்றுச் சுட்டுப் பெயர்கள். இவ்வாறு கூறப்பட்ட சுட்டுப் பெயர்கள் பன்னிரெண்டு.அவற்றோடு யாது, யா, யாவை என்னும் வினாப்பெயர் மூன்றையும் கூட்ட அமையும் பெயர்கள் பதினைந்தாகும். அவையனைத்தும் ஒன்றன் பாலையும்,பலவின் பாலையும் உணர்த்த வருகின்ற அஃறிணைப் பெயர்கள் என விளக்குகிறார் தொல்காப்பிய உரையாசிரியர்.

**(எ.கா)அது,இது,உது ----->** ஒன்றன் பால் மூவிடச் சுட்டுப்பெயர்கள் (துவ்வீ று)

**அஃது,இஃது,உஃது ----->** ஒன்றன் பால் மூவிடச் சுட்டுப்பெயர்கள்
(ஆய்தம் அணைந்த துவ்வீறு)

**அவை,இவை,உவை ----->**பலவின்பால் மூவிடச்சுட்டுப் பெயர்கள்.

**அவ்,இவ்,உவ் ----->**வகர மெய்யீற்று மூவிடச் சுட்டுப் பெயர்கள்

**யாது, யா,யாவை ------>**வினாப் பெயர்கள்.

தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ள சுட்டுப்பெயர்கள் யாவும் சங்க கால இலக்கியங்களில் வழங்குகின்றன.தற்கால தமிழில் இடைநிலைச் சுட்டுப் பெயர்களகிய உவன்,உவள்,உவர்,உது,உவை என்பன வழக்கில் இல்லை.ஆனால் சங்ககால இலக்கியங்களில் இவை வழக்கில் இருந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

**"பாக்கத்து உவன்வரின் எவனோ? பாண!" (நற்-127:3)**

எனவும்,

**"உதுக்காண் தோன்றும் என் சிறுநல் ஊரே" (நற் -264:9)**

என்ற நற்றிணை வரிகளும் சான்று பகர்கிறது.இதைக் குறித்து பிற்கால இலக்கண நூலான தொன்னூல் விளக்கம் குறிப்பிடுகையில்

**"அ இ உம் முதல ஐம்பால் சுட்டே**
**ஒன்றன்பால் அவை ஆய்தம் இடை எனவும்**
**பலவின்பால் அவை அவ் ஈற்றனவும் ஆம்**
**இவைகீழ் மூஇனம் இயைபுளி முறையே**
**ஆய்தம் மெலி இயல்பு ஆகும் என்ப" (தொன்.நூ-100)**

என்கிறது.மொழியின் முதலில் வரும் எழுத்துக்களாக அ,இ,உ என்பன மூன்றும் சுட்டுப் பெயர்களாகும்.

**(உ-ம்) அவன், இவன், உவன்**
**அவள், இவள், உவள்** **உயர்திணைமுப்பால்**
**அவர்,இவர், உவர்**
**அது,இது, உது**
**அஃறிணை இருபால்**
**அவை, இவை, உவை**

அக்கொற்றன்,இக்கொற்றன், உக்கொற்றன் என்பவை மொழியின் புறத்தே அமைந்ததாகும்.ஒன்றன்பால் சுட்டோடு இடையில் ஆய்தமும் வரும் **(உம்) அஃது இஃது,உஃது.** பலவின்பால் சுட்டுச் சொல்லானது வகர ஒற்றை இறுதியாகக் கொண்டு அமையும்.**(அவ்,இவ்,உவ்)** எனவும் வரும். இதற்கு சீவகசிந்தாமணியின் பாடல் அடியும் சான்றாகிறது.

**"அவ்வினை விளையுளுண்ணு மவ்விடத் தவர்க டுன்பம், இவ்வென"**
**(சீவக.சிந்தா-2762:2)**

இது போல் வகர ஒற்று ஈற்றுச் சுட்டின் முன் இடையினம் வரின் வகரம் இயல்பாய் நிற்கும், வல்லினம், மெல்லினம் வரின் முறையே ஆய்தமாகவும், ஒத்த மெல்லினமாகவும் வரும் என்கிறார், வீரமாமுனி .

**(உ.ம்) அவ்+வலி -** அவ்வலிய (இயல்பாய் வந்தது)
**அவ்+சிறிய -** அஃசிறிய (வல்லினம்----> ஆய்தமானது)
**அவ்+நீடிய -**அந்நீடிய (மெல்லினம் இரட்டித்து வந்தது)

வினா எழுத்தும், வினாப் பெயரும் குறித்துத் தொன்னூலாரின் மற்றொரு நூற்பாவான

**"எ யா முதலும் ஆ ஓ ஈற்றும்**
**ஏ இரு வழியும் வினா ஆகும்மே**
**எவன் என் வினா வினைக்குறிப்பு இழி இருபால்"** **(தொன்.நூ -102)**

என்பதை உரைக்கையில் எகரமும், யகாரமும் மொழிக்கு முதலிலும் ஆகாரமும்,ஓகாரமும் மொழிக்கு ஈற்றிலும், ஏகாரமானது மொழிக்கு முதலிலும்,ஈற்றிலும் வினாவாகி வரும் என்கிறது.

**(உ.ம்) எவன், எவள், எவர்**
**இவை உயர்திணை முப்பால்**
**யாவன், யாவல், யாவன்**
**எது,எவை,**
**இவை அஃறிணை இருப்பால்**
**யாது, யாவை**

இதில் எகரமும்,யகாரமும் மொழியின் அகத்தே அமைந்துள்ளது.
**எக்கொற்றன், யாங்ஙன -**இது மொழியின் புறத்தே அமைந்தது.
**நீயா,நீயோ -**ஆகாரமும், ஓகாரமும் மொழியின் ஈற்றில் புறத்தே அமைந்துள்ளது.
**ஏவன் -** ஏகாரம் மொழிக்கு முதலில் அகத்தில் வந்தது.
**கொற்றனே -** இதில் ஈற்றில் வந்து புறத்தே அமைந்தது.

அதுமட்டுமின்றி பிறபெயரோ புணர்ந்து வினாவாகவும் அமையும்.

**(உ.ம்) எ+குதிரை -** எக்குதிரை
**யா+ செய்தி -** யாச்செய்தி

யா என்பது வினாவெழுத்தாக மட்டுமல்லாமல் வினைச் சொல்லாகி வினையொடு புணர்ந்து அஃறிணை இருபாலுக்கும் வரும்.இதை

**"யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்**
**சோகாப்பர் சொல் இழுக்குப் பட்டு"** **(குறள் -127)**

என்ற குறளும் கூறுகிறது. இதை பிற இலக்கண நூல்களான நன்னூல்,முத்துவீரியம் இலக்கண விளக்கம் வெவ்வேறு முறைகளிலும் எடுத்தியம்புகிறது.தொல்காப்பியமானது உயர்திணைப் பெயர், அஃறிணைப் பெயர் என நூற்பாவிலேயே முழு விளக்கத்தையும் தர, தொன்னூலானது நூற்பாவைக்

கூறி அதன் விளக்கத்தில் சுட்டெடுத்து, வினாவெழுத்து புணரும் முறை, மொழியின் எவ்விடத்தில் அமையும் முறை என விரிவான ஒரு தெளிவுரையை தருகிறது.

**முடிவுரை**

தமிழின் தொன்மைக்கும், பெருமைக்கும் சான்றாக திகழும் தொல்காப்பியம் தொடர்ந்து போற்றப்பட்டும்,மதிக்கப்பெற்றும் வந்த நிலையில் கால இடைவெளியில் பல இலக்கணங்கள் தோன்றியுள்ளன.அதில் ஐந்து இலக்கணங்களையும் தன்னகத்தேக் கொண்டுள்ள தொன்னூல் விளக்கமானது சொல் என்ற முறையில் தொல்காப்பியத்திலிருந்து எத்தகைய மாற்றுக் கருத்துக்களையும் சிந்தனைகளையும் கொண்டுள்ளது என்பதை நூற்பாக்கள் உணர்த்துகின்றன.சொல் என்ற முறையில் பெயர்ச்சொல்,வினைச்சொல் முதன்மை சொற்களாகவும் இடைச்சொல்,உரிச்சொல் துணைமைச் சொற்களாகவும் காப்பியர் கூற முனிவரோ பெயர், வினை,இடை,உரி என நான்கு கூறுபாடுகளாக பிரிக்கின்றார். அதில் பெயர்ச்சொல்லானது உயர்திணைப் பெயர்,அஃறிணைப் பெயர்,விரவுப் பெயர் என தொல்காப்பியர் இயம்ப தொன்னூலாரோ பெயரானது வேற்றுமை பெற்று இடம்,பால்,திணை இவற்றைக் கொண்டு மரபு, காரணம், ஆகுபெயர்,இடுகுறிப்பெயர் என நால்வகையில் அமையும் என்கிறார்.

**துணைப் நூற்பட்டியல்**

1.கம்பன், -இராமாயணம் யுத்த காண்டம், மூன்றாம் பகுதி,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
இரண்டாம் பதிப்பு -2010

2.கணேசையர், -தொல்காப்பியம் சொல்லதிகார மூலமும் சேனாவரையருரையும்,
கணேசையர் பதிப்பு,
தரமணி, சென்னை-600113,
இரண்டாம் பதிப்பு-2007

3.சுந்தர மூர்த்தி கு (ப.ஆ) - முத்துவீரியம்,
கழக வெளியீடு,திருநெல்வேலி,
தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,லிமிடெட்,
பிரகாசம் சாலை, சென்னை-1
முதற்பதிப்பு-1972.

4.திருஞானசம்பந்தம்.ச,-பவணந்தி முனிவரின் நன்னூல்,
சொல்லதிகாரம் காண்டிகை உரை,
கதிர் பதிப்பகம்,
தெற்கு வீதி, திருவையாறு -613204.
முதற்பதிப்பு- நவம்பர் -2008.

5.நச்சினார்க்கினியர், - சீவக சிந்தாமணி,
எஸ்.எம் ஜெகன்நாதம்,
கும்பகோணம், அக்டோபர்-1874

6.புலியூர்க்கேசிகன், -நற்றிணை இரண்டாம் பகுதி,
பாரிநிலையம், பிராட்வே,
சென்னை - 600001 மறுபதிப்பு: 2007.

7.வரதராசனார். -மு,திருக்குறள் தெளிவுரை,
திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த
நூற்பதிப்புக் கழகம் லிட்,
டி.டி.கே சாலை,சென்னை -600018,
115-வது பதிப்பு-சனவரி-1923.

7.வீரமாமுனிவர், -ஐந்திலக்கணத் தொன்னூல் விளக்கம்,
கழக வெளியீடு, திருநெல்வேலி தென்னிந்திய
சைவசித்தாந்தநூற்பதிப்புக் கழகம்.லிட்,
ஆழ்வார்பேட்டை,சென்னை -600018,
2-ம் பதிப்பு -2019.